# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.106/2024 | Deposition of Witness for : PW2 |
| Name : சின்னதுரை | Father/Husband Name : பால்துரை |
| Age : 58 | Village : அம்மன் புரம், சீர்காட்சி |
| Taluk : திருச்செந்தூர் | Calling : டீக்கடை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29 October 2025. Accused absent. Petition U/s.355 BNSS filed and allowed.

<u>**முதல் விசாரணை**</u> :-

1. நான் தற்போது அம்மன்புரத்தில் குடியிருந்து டீக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மனைவி ஆவார். எதிரியை தெரியும்.

2. எங்கள் கடையின் முன்பு எதிரி குடித்துக்கொண்டிருந்ததை நான் தட்டிக் கேட்டதால் எதிரி கடையின் மீது கற்களை வீசி பிரச்சனை செய்தார். இந்த சம்பவத்தை வெளியூரில் இருந்த ப.சா.2 ரமேஷ் என்பவருக்கு தகவல் தெரிந்து அவர் எதிரியிடம் நடந்த சம்பவத்தை குறித்து கேட்டார். அதன் காரணமாக எதிரி எங்கள் மீது முன்விரோதம் கொண்டிருந்தார்.

3. கடந்த 31.12.2023 ஆம் தேதி மாலை 6.00 மணியளவில் அம்மன்புரம் பஸ் ஸ்டாப்பில் எனது மகன் பேருந்துக்காக காத்துக்கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த எதிரி எனது மகனை புண்டா மவனே, தேவடியா மவனே என்று ஆபாசமாக பேசி கருக்கு மட்டையால் எனது மகன் ப.சா.2 ஐ தாக்கினார். இந்த சம்பவத்தை பார்த்து நானும் எனது மனைவியும் சத்தம் போட்டோம். உடனே எதிரி கருக்குமட்டையால் எனது மனைவி இடது கையில் தாக்கினார். அதனால் என் மனைவி கையில் காயம் ஏற்பட்டது.

4. காயம்பட்ட என் மனைவி மற்றும் ப.சா.2 எனது மகனும் திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றார்கள். மேல்சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சேர்ந்தார்கள். எனது மனைவி கையில் ஏற்பட்ட காயத்திற்கு தையல் போடப்பட்டது. அங்கு என் மனைவி 1 வாரம் சிகிச்சையில் இருந்தார். எனது மகன் வெளிநோயாளியாக சிகிச்சையில் இருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u> : இல்லை

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2025.10.29 19:05:44 +0530

Judicial Magistrate, Sathankulam.